## பூவுலகின் நண்பர்கள்

**www.poovulagu.org**



வெள்ளக் காடு. வீடு மூழ்கிக் கிடக்கிறது. மரத்திலேறி ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். கீழே வாசகம்: மரத்தை நாம் காப்பாற்றினால், மரம் நம்மைக் காப்பாற்றும். இதுபோல் சுவாரஸ்யத்துடன் சுற்றுச்சூழல், இயற்கை பாதிப்புகள் பற்றி சீரியஸான செய்திகள் அடங்கியுள்ள வலைதளம். ஒரு மரத்தின் மதிப்பு: ரூ.5.30 லட்சம் மதிப்புள்ள ஆக்சிஜனை வெளியிடுகிறது. ரூ.6.40 லட்சம் மதிப்புள்ள மண் அரிப்பைத் தடுக்கிறது. ரூ.10 லட்சம் மதிப்புள்ள உணவைத் தருகிறது. ரூ.10.30 லட்சம் மதிப்புள்ள காற்று மாசுபாட்டைத் தடுக்கிறது.

## புகைப்படம்

**www.photo.net**



புகைப்படக் களஞ்சியம் எனலாம் இந்த வலைதளத்தை. இதில் இல்லாத புகைப்படங்களே இல்லை. எல்லாப் புகைப்படங்களும் வகைவாரியாகப் போடப்பட்டுள்ளது. சில கிராஃபிக்ஸ் படங்களும் உண்டு. புகைப்படக் கருவிகள், புகைப்படம் எடுக்கும் நுட்பம் பற்றியும் தகவல்கள் அடங்கியுள்ளன.

## வீணாப்போனவன்

**www.veenaapponavan.blogspot.com**

இயல்பான காட்சிகள், இயல்பான வரிகளில் முகுந்த் நாகராஜனின் கவிதைகள் ஏற்படுத்துகிற பாதிப்புகள் அதிகம். அவரின் அத்தனை கவிதைகளையும் இந்த வலைப்பூவில் படிக்கலாம். அறிவிக்கப்பட்ட மின்வெட்டு என்ற பெயரிலான ஒரு கவிதை: தோசை மாவை அரைத்து முடித்தாயிற்று. மோட்டார் போட்டு தண்ணீரை மேலே ஏற்றியாகி விட்டது.. எட்டு மணிக்குள் பாதுகாப்பான இடம் தேடி. 8 ஆயிற்று. மின்வெட்டு ஆகவில்லை.. 8.01 ஆயிற்று..8.02 ஆயிற்று.. பதட்டம் நீடிக்கிறது.

## நூலகம்

**www.noolaham.net**




ஈழத்து எழுத்துகள் அடுத்த தலைமுறைகளுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் ஆவணப்படுத்தப்பட்டு வரும் மின் நூலகம். இதுவரை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் ஆவணப்படுத்தப்பட்டு உள்ளன. தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் நூல்களை ஆவணப்படுத்தாததற்கான காரணம் என்னவென்று புரியவில்லை. இந் நூலகத்திலாவது தூங்காமல் படிக்கவும்.

## போரடிக்குதா மச்சி...

**www.bored.com**

சோர்வுற்றிருக்கிற உங்களை எப்படியும் சுறுசுறுப்படைய வைத்துவிட வேண்டும் என்பதற்காகவே இயங்கும் தளம். கேம்ஸ், ஜோக்ஸ், சாட்டிங், இசை என கலகலப்பாக்குவதற்கு எல்லா வகையிலும் முயற்சிக்கிறார்கள். சிரிக்கவே மாட்டேன் என்று சபதம் எடுத்திருப்பவர்கள் இந்தத் தளத்திற்குச் சென்று தங்களைப் பரிசோதித்துக் கொள்ளலாம்.

